6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*